# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.82/மா/2022**

**நாள். 29.07.2022**

திரு.த. விக்னேஸ்வரன்,
திருச்சிராப்பள்ளி – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
ஸ்ரீரங்கம் கோட்டம்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி – எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி, கிராப்பட்டி, வடக்கு விஸ்தரிப்பு, சிம்கோ காலனி, 6வது தெரு, கதவு எண்.5ல் வசிக்கும் திரு. த.விக்னேஸ்வரன் என்பவரின் 17.06.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.06.2022–ல் பெறப்பட்டு, 82/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி, கிராப்பட்டி, வடக்கு விஸ்தரிப்பு, சிம்கோ காலனி, 6வது தெரு, கதவு எண்.5ல் வசிக்கும் திரு. த.விக்னேஸ்வரன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 17.06.2022 நாளிட்ட தனது மனுவில் :

" திருச்சி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டம், நகர சர்வே வார்டு N, பிளாக், 35 டவுன் சர்வே எண் 4–க்கு கட்டுப்பட்ட இடத்திற்கு, திருச்சி ஹோலி கிராஸ் பெண்கள் கல்லூரிக்கு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சர்வே எண்ணிற்கு கட்டுப்பட்ட நீர்நிலை வாய்க்காலினை ஆக்கிரமிப்பு செய்து கல்லூரி கட்டிடம் கட்டியுள்ளனர். இதனால் மழை காலங்களில் தண்ணீர் செல்ல வழியின்றி சாலையில் தேங்கும் நிலை உள்ளது. இந்நிலையில் வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற மாநகராட்சி நிர்வாகத்திற்கு மட்டுமே அதிகாரம் உள்ள நிலையில் மாநகராட்சி அதிகாரிகள் மேற்கண்ட வாய்க்காலில் கல்லூரிக்கு கட்டிடம் கட்ட, கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட ஆக்கிரமிப்பினை அகற்ற மேல் நடவடிக்கை எதுவும் எடுக்காமல் காலதாமதம் செய்து வருகின்றனர். எனவே இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றியும் மற்றும் கட்டிட அனுமதியை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2.** முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கை கோரி 29.06.2022 நாளிட்ட அறிவிப்பு, உதவி ஆணையர், ஸ்ரீரங்கம் கோட்டம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு

அனுப்பப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் தனது 13.07.2022 நாளிட்ட அறிக்கையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" திரு. த.விக்னேஷ்வரன் என்பவர் வார்டு எண் 21, டவுன் சர்வே எண் N, பிளாக் எண் 35, நகரளவு எண் 4 என்ற இடத்தில் திருச்சி ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரி நிர்வாகம் நீர்நிலை வாய்க்காலை ஆக்கிரமிப்பு செய்து கட்டடங்கள் கட்டியுள்ளதாகவும் இவற்றால் மழைக்காலங்களில் தண்ணீர் செல்ல வழியின்றி சாலையில் தேங்கும் நிலை ஏற்பட்டு வருவதாகவும், எனவே இக்கல்லூரியின் வளாகத்தில் உள்ள வாய்க்கால் ஆக்கிரமிப்புகளை அகற்றி தருமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் W.P.(MD) No.11999/2022–ல் வழக்கு தொடர்ந்ததன் அடிப்படையில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் கடிதம் எண் எப்/4170/2020 நாள் 23.06.2022 வாயிலாக நகரசார் ஆய்வர் அவர்களுக்கு வாய்க்கால் ஆக்கிரமிப்பு தொடர்பான அரசு ஆவணங்களின் அடிப்படையில் அளவீடு செய்து விரைவில் அறிக்கை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது என்றும், எனவே நகரசார் ஆய்வரைக்கொண்டு விரைவில் அளவீடு செய்து அதன் அறிக்கையின் அடிப்படையில் நீதிமன்றத்தில் எதிர்வாதுரை தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின்படி ஆக்கிரமிப்பு தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

3. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரை 19.07.2022 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற 29.06.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

4. மனுதாரர் 19.07.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை. தனக்கு உடல் நிலை சரியில்லை என்றும், மருத்துவ சிகிச்சையில் இருப்பதாகவும் தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளார்.

5. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவியாளர் 19.07.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள வார்டு எண் 21, டவுன் சர்வே வார்டு எண் N, பிளாக் எண் 35, நகரளவு எண் 4 என்ற இடத்தில் திருச்சி ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரி நிர்வாகம் வாய்க்காலை ஆக்கிரமிப்பு செய்து கட்டடங்கள் கட்டியுள்ளதாக தெரிவித்து, மேற்கண்ட ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள கட்டடங்களை அகற்றக்கோரி மனுதாரரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் வழக்கு W.P. (MD) No. 11999/2022 தொடர்ந்ததையடுத்து, மேற்கண்ட கல்லூரியில் உள்ள ஆக்கிரமிப்புகள் குறித்து அளவீடு செய்து அது தொடர்பான அறிக்கையை அனுப்புமாறு நகரசார் ஆய்வரை கேட்டுக்கொள்ளப்பட்டது. நகரசார் ஆய்வாளர் தனது 12.07.2022 நாளிட்ட அறிக்கையில் மேற்கண்ட கல்லூரியின் உள்ளே அமைந்திருக்கும் வாய்க்கால் மற்றும் சாக்கடையின் மேல் கல்லூரியின் அலுவலகக் கட்டிடம், கழிப்பறை, சைக்கிள் ஸ்டாண்ட் போன்றவை அமைந்துள்ளது என தெரிவித்து அதற்கான வரைபடத்தையும் மாநகராட்சிக்கு அனுப்பியுள்ளார் என்கின்ற விவரத்தையும், இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நகர சார் ஆய்வரின் 12.07.2022 நாளிட்ட அறிக்கை மற்றும் வரைபடம் ஆகியவற்றின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என்றும் மேலும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரின் 13.07.2022 நாளிட்ட கடிதத்தையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை, மாநகராட்சி உதவியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

- மனுதாரர் தனது புகார் மனுவில், திருச்சி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டம், நகர சர்வே வார்டு N, பிளாக் 35, டவுன் சர்வே எண் 4க்கு கட்டுப்பட்ட இடத்தில் திருச்சி ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரிக்கு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட சர்வே எண்ணிற்கு கட்டுப்பட்ட நீர்நிலை வாய்க்காலினை ஆக்கிரமிப்பு செய்து கல்லூரிக்கு கட்டடம் கட்டியுள்ளனர் என்றும் இதனால் மழைக்காலங்களில் தண்ணீர் செல்ல வழியின்றி சாலையில் தேங்கும் நிலை உள்ளது என தெரிவித்து வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற மாநகராட்சி நிர்வாகத்திற்கு மட்டுமே அதிகாரம் உள்ள நிலையில் மாநகராட்சி அதிகாரிகள் மேற்கண்ட வாய்க்காலின் மேல் கல்லூரிக்கு கட்டடம் கட்டிட அனுமதி வழங்கியுள்ளது மட்டுமன்றி அந்த ஆக்கிரமிப்பினை அகற்ற நடவடிக்கை எதுவும் எடுக்காமல் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் காலதாமதம் செய்து வருகின்றனர் என தெரிவித்துள்ளார்.

- திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் தனது 13.07.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரர் மனுவில் கூறப்பட்டவற்றை மேற்கோள்காட்டி, மேற்படி புகார் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மனுதாரர் W.P.(MD) No.11999/2022–ல் வழக்கு தொடர்ந்ததன் அடிப்படையில் நகர சார் ஆய்வருக்கு ஆக்கிரமிப்பு இடம் தொடர்பான அரசு ஆவணங்களின் அடிப்படையில் அளவீடுசெய்து விரைவில் அறிக்கை வழங்குமாறும், அவரால் சமர்பிக்கப்படும் அறிக்கையின் அடிப்படையில் நீதிமன்றத்தில் எதிர்வாதுரை செய்யப்படும் எனவும் நீதிமன்ற உத்தரவின்படி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

- நகர சார் ஆய்வர் தனது 12.07.2022 நாளிட்ட அறிக்கையில் " திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியமங்கலம் கோட்டம் திருச்சி டவுன், வார்டு N-பிளாக் 35, நகரளவை 17 மற்றும் 4ல் அமைந்துள்ள வாய்க்கால் மற்றும் சாக்கடையில் அமைந்துள்ள ஆக்கிரமிப்புகளை அளவைப் பணி செய்து அறிக்கை கோரப்பட்டுள்ளது. இதன்படி மேற்படி புல எண்களில் தளப்பார்வை மற்றும் அளவைப்பணி மேற்கொள்ளப்பட்டது. புல எண் 4 என்பது நகரளவை கணக்குகளில் சாக்கடை எனவும், நகரளவை எண் 17 என்பது வாய்க்கால் எனவும் பதிவாகியுள்ளது. மேற்படி சாக்கடை மற்றும் வாய்க்கால் இரண்டும் திருச்சி ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரி வளாகத்திற்குள் அமைந்துள்ளன. அளவைப்பணி செய்ததில், இந்த வாய்க்கால் மற்றும் சாக்கடையின் மேல் மேற்படி கல்லூரிக்கு சொந்தமான அலுவலகக்கட்டிடம், கழிப்பறை, சைக்கிள் ஸ்டாண்ட், வகுப்பறை கட்டிடம் ஆகியவற்றின் ஒரு பகுதி அமைந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது எனவும் தெரிவித்து அந்த ஆக்கிரமிப்பை வண்ணமிட்டு காட்டி புல வரைபடம் தயாரித்து, SLR நகல்களுடன் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

- மேற்படி நகர சார் ஆய்வரின் அறிக்கை மற்றும் SLR–ன்படி திருச்சி ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரி கீழ்க்கண்ட விவரப்படி அரசு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளது தெள்ளத் தெளிவாக தெரிய வருகிறது.

| | |
|---|---|
| வாய்க்கால் (T.S.17)<br>ஆக்கிரமிப்பு பகுதி | 447 ச.மீ. |
| சாக்கடை (T.S.No.4 ) ஆக்கிரமிப்பு | 181.5 ச.மீ. |

7. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி நகர சார் ஆய்வரின் அறிக்கையிலிருந்து, மேற்கண்ட திருச்சி ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரி நிர்வாகம் அரசு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதும் இது தொடர்பாக மனுதாரரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு W.P.(MD) No.11999/2022 நிலுவையில் உள்ளதும் ஊர்ஜிதமாகிறது. 2014ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டபிரிவு 10(3)(b)ன்படி நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும் முறைமன்ற நடுவர் விசாரணை செய்தல் கூடாது

என்பதால் இம்மனு மீதான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்துவைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

இருப்பினும் திருச்சி மாநகராட்சியில் இதுபோன்ற அரசு நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை கண்டறிய குழு ஒன்றை நியமித்து, ஆக்கிரமிப்புகள் இருப்பது கண்டறியப்பட்டால், உரிய விதிகளுக்குட்பட்டு அவ்வாறான ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு சட்ட விதிகளுக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ள திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

2022-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 29-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. த.விக்னேஸ்வரன்,
   த/பெ. தங்கவேல்,
   எண்.5, 6வது தெரு,
   சிம்கோ காலனி வடக்கு விஸ்தரிப்பு,
   கிராப்பட்டி,
   திருச்சிராப்பள்ளி – 620 012.
2. ஆணையாளர்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   திருச்சிராப்பள்ளி.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.
4. உதவி ஆணையர்,
   ஸ்ரீரங்கம் கோட்டம்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   திருச்சிராப்பள்ளி.
5. இணை இயக்குநர்,
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

29/7/22

செயலாளர்